5, அறிக்கை அளித்தல்

அரசு உறுதி மொழிக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர். ஜெ. பரந்தாமன் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் சார்பாக.

டாக்டர் ஜெ, பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குழுத் தலைவரின் சார்பாக 1992–93 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்

6. மானியக் கோரிக்கைகள், 1993–94—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி,

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத்துறை,

(ஆ) கோரிக்கை எண் 15—காவல்துறை,

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி,

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயம் நல்லதொரு வளர்ச்சியினை எய்த, அங்கு அமைதி நிலவ வேண்டும். ஆக்க பூர்வமான செயல்கள் நடைபெறுவதற்கு ஏற்ற ஆரோக்கியமான சூழ்நிலை அமைய வேண்டும். சமுதாயத்தில் உள்ள பல்வேறு தீய சக்திகளையும், சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் தனி மனித மற்றும் சமூக இடர்பாடுகளையும், இன்னல்களையும் களைந்து அமைதியை நிலைநாட்டி, பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் தேவையான ஒரு அடிப்படை வசதியை அமைத்துக் கொடுக்கும், அரிய பணியினை ஆற்றி வரும் துறை தான் காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறைகள் ஆகும்.